Vetrii IAS Study Circle
The Best Academy for IAS & TNPSC Exams

# T-12/T-18/T-37-அலகு VII

Download PDF

1) “ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. கொன்றைவேந்தன்
- C. வாக்குண்டாம்
- D. ஆத்திசூடி
- E. விடை தெரியவில்லை

2) “அரியவற்றுள் எல்லாம் அரிதே” என்று திருக்குறள் எதனைக் குறிப்பிடுகிறது?

- A. பெரியாரைப் பேணித் தம் உறவாகக் கருதுதல்
- B. சிறந்த நண்பர்களைப் பெறுதல்
- C. நல்ல உறவினரைப் பெறுதல்
- D. B & C
- E. விடை தெரியவில்லை

3) “தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு” - இக்குறளில் பயிலும் அணிவகை எது?

- A. உவமையணி
- B. எடுத்துக்காட்டு உவமையணி
- C. வேற்றுமையணி
- D. தற்குறிப்பேற்ற அணி
- E. விடை தெரியவில்லை

4) கீழ்க்கண்டவற்றுள் நல்லாதனார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்.
2. இவரைச், செருஅடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடுகிறது.
3. இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரில் பிறந்தார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

5) யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் ________ வாறு - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. பொல்லாத
- B. நில்லாத
- C. பயிலாத
- D. கல்லாத
- E. விடை தெரியவில்லை

6) கீழ்க்கண்டவற்றுள் நாலடியார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல்.
2. இந்நூலை முப்பாலாகப் பகுத்தவர் பதுமனார்
3. நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.
4. திருக்குறளுக்கு அடுத்து மற்றும் இணையாக வைத்துப் போற்றப்படும் நூல்.

- A. 1 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

7) பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சும் அவன்கற்ற நூல் - இக்குறளில் பயின்று வரும் அணிநயம் எது?

- A. உவமையணி
- B. எடுத்துக்காட்டு உவமையணி
- C. இல்பொருள் உவமையணி
- D. உருவக அணி
- E. விடை தெரியவில்லை

8) கீழ்க்கண்ட எந்தப் பண்பினால் இவ்வுலகம் நிலைத்து வாழ்கிறது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. வீரம்
- B. ஈகை
- C. சிற்றினம் சேராதிருத்தல்
- D. கண்ணோட்டம்
- E. விடை தெரியவில்லை

9) “நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்” - இப்பாடலடிகளின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. சமணமுனிவர்கள்
- C. முன்றுறை அரையனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

10) வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத்து அற்று - இக்குறட்பாவில் பயின்று வரும் அணிநயம் யாது?

- A. எடுத்துக்காட்டுவுமையணி
- B. உவமையணி
- C. இல்பொருளவுமையணி
- D. உருவக அணி
- E. விடை தெரியவில்லை

11) கீழ்க்கண்டவற்றுள் இன்னா நாற்பது பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. துன்பம் கொடுக்கும் செயல்களைத் தொகுத்துக் கூறும் நூல்.
2. இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்களைக் கொண்டுள்ளது.
3. இந்நூலில் மொத்தம் 164 இன்னாச் செயல்கள் கூறப்படுகின்றன.

- A. 1 மட்டும்
- B. 3 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

12) “அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர்” - இப்பாடலடிகள் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

- A. கொன்றைவேந்தன்
- B. மூதுரை
- C. நல்வழி

- D. ஆத்திசூடி
- E. விடை தெரியவில்லை

13) “வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை
இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை” - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்பொருள் முறையே

- A. ஈகை, உடம்பு
- B. அறிவு நுட்பம், கொடை
- C. கொடை, நோய்
- D. அன்பு, அறிவு நுட்பம்
- E. விடை தெரியவில்லை

14) தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின் - இக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் எது?

- A. அருளுடைமை
- B. புறங்கூறாமை
- C. நடுவுநிலைமை
- D. செங்கோன்மை
- E. விடை தெரியவில்லை

15) கல்வியறிவில்லாதவரிடம் உள்ள செல்வம் எதனை விடக் கொடியது?

- A. கல்லாமையை விடக் கொடியது
- B. தீய நட்பை விடக் கொடியது
- C. விளையாத தரிசு நிலத்தை விட மோசமானது
- D. நல்லவர் படும் வறுமையை விடத் துன்பமானது
- E. விடை தெரியவில்லை

16) “வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல்” – என்று அறிவுரைக் கூறும் நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. மூதுரை
- C. நாலடியார்
- D. திரிகடுகம்
- E. விடை தெரியவில்லை

17) ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை - இக்குறளடியில் ‘இறை’ என்ற சொல்லின் பொருள் யாது?

- A. இறைவன்
- B. நடுவுநிலைமை
- C. அரசன்
- D. செங்கோல்
- E. விடை தெரியவில்லை

18) “என்புதோல் போர்த்த உடம்பு” என்று திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?

- A. கண்ணோட்டம் அற்றவர்
- B. அறிவில்லாதார்
- C. அன்பில்லாதார்
- D. வலிமையில்லாதார்
- E. விடை தெரியவில்லை

19) “முகத்திரண்டு புண்ணுடையர்” என்று திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?

- A. இரக்கம் இல்லாதவர்

- B. பெருமையில்லார்
- C. கல்லாதவர்
- D. மானமில்லார்
- E. விடை தெரியவில்லை

20) “உள்ளத்தான் நள்ளாது உறுதித் தொழிலராய்க்
கள்ளத்தான் நட்டால் கழிகேண்மை” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. பழமொழி நானூறு
- C. மூதுரை
- D. நாலடியார்
- E. விடை தெரியவில்லை

21) கீழ்க்கண்டவற்றுள் நான்மணிக்கடிகை பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. ஜியு போப் 6வது, 100வது பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
2. இந்நூல் கடவுள் வாழ்த்துடன் மொத்தம் 102 பாடல்களைக் கொண்டுள்ளது.
3. இந்நூலின் ஆசிரியர் விளம்பிநாகனர்.
4. கடிகை என்பதற்கு துண்டு (பகுதி), கட்டுவடம், ஆபரணம் என்று பொருள்.

- A. 1 மற்றும் 2
- B. 3 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

22) நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மான் புனைபாவை யற்று - இக்குறளில் பயின்று வரும் அணிநயம் யாது?

- A. வேற்றுமையணி
- B. உருவகவணி
- C. ஏகதேச உருவகவணி
- D. உவமையணி
- E. விடை தெரியவில்லை

23) வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது?

- A. எடுத்துக்காட்டு உவமையணி
- B. உவமையணி
- C. உருவகவணி
- D. ஏகதேச உருவகவணி
- E. விடை தெரியவில்லை

24) ‘சேரிடம் அறிந்து சேர்’ எனும் ஆத்திசூடிக் கருத்தை எதிர்மறையில் உணர்த்தும் திருக்குறள் அடி,

- A. பேதையார் கேண்மை ஒரீஇ விடல்
- B. இன்னும் அறிந்து யாக்கநட்பு
- C. கொடுத்துங் கொளல் வேண்டும் நட்பு
- D. கைவிடுவார் கேண்மை அடுங்காலை உள்ளினும் உள்ளஞ்சுடும்
- E. விடை தெரியவில்லை

25) “மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. ஆத்திசூடி
- C. கொன்றைவேந்தன்

- D. மூதுரை
- E. விடை தெரியவில்லை

26) “நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு” - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்களின் இலக்கணக்குறிப்பைத் தேர்க.

- A. தொழிற்பெயர், வினைத்தொகை
- B. எதிர்மறைப் பெயரெச்சம், பண்புத்தொகை
- C. இரண்டாம் வேற்றுமைத்தொகை, எதிர்மறைத் தொழிற்பெயர்
- D. பண்புத்தொகை, எதிர்மறைத் தொழிற்பெயர்
- E. விடை தெரியவில்லை

27) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. நன்றிக்கு வித்தாகும் தீயொழுக்கம் நல்லொழுக்கம்
  என்றும் இடும்பை தரும்
- B. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
  என்றும் இடும்பை தரும்
- C. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
  இடும்பை என்றும் தரும்
- D. வித்தாகும் நன்றிக்கு நல்லொழுக்கம் இடும்பை
  தரும் என்றும் தீயொழுக்கம்
- E. விடை தெரியவில்லை

28) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறட்பாவில் பயின்று வரும் அணிநயம் யாது?

- A. இல்பொருள் உவமையணி
- B. வேற்றுமையணி
- C. பிறிதுமொழிதல் அணி
- D. உவமையணி
- E. விடை தெரியவில்லை

29) கீழ்க்கண்டவற்றுள் முனைப்பாடியார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவரது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு.
2. இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்.
3. இவர் பிறந்த ஊர் திருமுனைப்பாடி.
4. இவர் எழுதிய நூல் அறநெறிச்சாரம்.

- A. 1, 2 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

30) நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல் - அடிக்கோடிட்ட சொற்களின் எதிர்ச்சொற்கள் முறையே,

- A. நண்பர், பகைவர்
- B. உறவினர், நண்பர்
- C. நண்பர், உறவினர்
- D. பகைவர், நண்பர்
- E. விடை தெரியவில்லை

31) “சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்” எவர்?

- A. அவையின் தன்மை அறியாமல் பேசுபவர்
- B. பொதுவாகப் பேசுபவர்
- C. பாமரர்க்கு ஏற்றவாறு பேசுபவர்

- D. அவையறிந்து பேசும் பேச்சாளர்
- E. விடை தெரியவில்லை

32) “தந்தீமை யில்லாதவர் நட்டவர் தீமையும்
எந்தீமை யென்றே உணர்பதாம்” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. நாலடியார்
- C. மூதுரை
- D. பழமொழி நானூறு
- E. விடை தெரியவில்லை

33) “ஊனைத் தின்று ஊனைப்பெருக்கல் முன்னின்னா” - இப்பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. நாலடியார்
- C. இன்னா நாற்பது
- D. பழமொழி நானூறு
- E. விடை தெரியவில்லை

34) பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந்து அற்று - இக்குறட்பாவில் பயிலும் அணிநயம் யாது?

- A. வேற்றுமையாணி
- B. உவமையணி
- C. எடுத்துக்காட்டு உவமையணி
- D. உருவகவணி
- E. விடை தெரியவில்லை

35) நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு - இக்குறளடியில், “வீடு” என்பதன் பொருள் யாது?

- A. குடியிருக்கும் இல்லம்
- B. விட்டுவிடுதல்
- C. பற்றின்மை
- D. விடுதலை
- E. விடை தெரியவில்லை

36) கீழ்க்கண்டவற்றுள் மூதுரை பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்.
2. இந்நூலிற்கு வாக்குண்டாம் என்று வேறுபெயர் உண்டு.
3. இந்நூல் விநாயகர் வாழ்த்துடன் தொடங்குகிறது.
4. இந்நூல் முப்பத்தொன்று வெண்பாக்களை கொண்டுள்ளது.

- A. 1, 2 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

37) “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. ஆத்திசூடி
- C. வாக்குண்டாம்
- D. கொன்றைவேந்தன்
- E. விடை தெரியவில்லை

38) “பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்: பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்” போன்ற நல்லொழுக்கத்தைக் கூறியவர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. பெருவாயின் முள்ளியார்
- C. சமணமுனிவர்கள்
- D. கூடலூர்கிழார்
- E. விடை தெரியவில்லை

39) கீழ்க்கண்டவற்றுள் அறநெறிச்சாரம் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. ஆட்சி முறைகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது.
2. இந்நூல் அனைத்தும் வெண்பாக்களால் ஆனது.
3. இந்நூல் 225 பாடல்களைக் கொண்டது.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

40) உரமொருவற்கு <u>உள்ள வெறுக்கை</u> அஃதில்லார்
மரம்மக்க ளாதலே வேறு - இத்திருக்குறளில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தேர்க.

- A. ஊக்கமின்மை
- B. மடிமைக் குணம்
- C. ஊக்க மிகுதி
- D. சினம் மிகுதி
- E. விடை தெரியவில்லை

41) இல்வாழ்க்கையின் நோக்கங்களுள் முதன்மையானதாக வள்ளுவம் குறிப்பது எது?

- A. அன்புடைமை
- B. வாழ்க்கைத் துணை நலம்
- C. மக்கட்பேறு
- D. விருந்தோம்பல்
- E. விடை தெரியவில்லை

42) “உள்ளத்தான் நள்ளாது உறுதித் தொழிலராய்க்
கள்ளத்தான் நட்டால் சுழிகேண்மை - தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்” - என்ற பாடலின் ஆசிரியர் யார்?

- A. கணிமேதாவியார்
- B. விளம்பி நாகனார்
- C. நல்லாதனார்
- D. சமண முனிவர்கள்
- E. விடை தெரியவில்லை

43) “நம் நெறி, குறள் நெறி; நம் மதம், குறள் மதம்!” எனத் திருக்குறளுக்குப் பாராட்டுரை வழங்கியவர் யார்?

- A. தந்தை பெரியார்
- B. பேரறிஞர் அண்ணா
- C. முத்தமிழறிஞர் கலைஞர்
- D. குன்றக்குடி அடிகளார்
- E. விடை தெரியவில்லை

44) பொருத்துக
இயல் அதிகாரங்களின் எண்ணிக்கை

(a) பாயிரவியல் 1. 32
(b) துறவறவியல் 2. 18
(c) அரசியல் 3. 4
(d) அங்கவியல் 4. 25
(e) கற்பியல் 5. 13

- A. 1 2 3 4 5
- B. 5 4 3 2 1
- C. 3 4 5 1 2
- D. 3 5 4 1 2
- E. விடை தெரியவில்லை

45) பின்வருவனவற்றுள் பழமொழிநானூறில் இடம்பெறாத ஒன்றைத் தேர்க.

- A. புன்புலால் தீர்க்கும் துறைவ! மற்று அஞ்சாதே
- B. அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற் றுடனியைந்து
- C. மஞ்சுசூழ் சோலை மலைநாட! யார்க்கானும்
- D. உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
- E. விடை தெரியவில்லை

46) "மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
ஓதின் புகழ்சால் உணர்வு" - இப்பாடலில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொற்கள் முறையே

- A. பெண்கள், பண்பில் சிறந்த
- B. நல்லெண்ணம், ஆண்கள்
- C. ஆண்கள், தீய எண்ணம்
- D. துன்பம் தரும், பண்பில் சிறந்த
- E. விடை தெரியவில்லை

47) கீழ்க்கண்டவற்றுள் பழமொழி நானூறு பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. நீதி நூல்களுள் திருக்குறள், புறநானூறுக்கு அடுத்துப் புகழ் பெற்ற நூல்.
2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இலக்கியத்தை மிகுதியாகத் தரும் நூல்.
3. சங்ககால மன்னர்கள், புலவர்கள், மூவேந்தர்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்ட நூல்.

- A. 1 மட்டும்
- B. 3 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

48) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. விருந்தோம்பல் இன்மை உடைமையுள் ஓம்பா
  மடமை மடவார்கண் உண்டு
- B. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
  மடவார்கண் மடமை உண்டு
- C. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
  மடவார்கண் உண்டு மடமை
- D. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
  மடமை மடவார்கண் உண்டு
- E. விடை தெரியவில்லை

49) 'மறத்தலின் ஊங்கில்லை கேடு' - என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. நட்பு
- B. மானம்
- C. குடிமை
- D. அறம்
- E. விடை தெரியவில்லை

50) மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் - இக்குறட்பாவிற்கு ஏற்ற பொருளைத் தேர்வு செய்க

- A. பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது; அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.
- B. ஒழுக்கத்தால் எவரும் மேம்பாட்டை அடைவர்; ஒழுக்கத்திலிருந்து தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர்
- C. ஒருவன், தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக்கொள்ள இயலும். ஆனால், ஒழுக்கம் குறைந்தால், அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்துபோகும்.
- D. ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்
- E. விடை தெரியவில்லை

51) “பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து” - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்களின் இலக்கணக்குறிப்பைத் தேர்க.

- A. பெயரெச்சம், வினையெச்சம்.
- B. எதிர்மறைப் பெயரெச்சம், நான்காம் வேற்றுமைத்தொகை
- C. இரண்டாம் வேற்றுமைத்தொகை, தொழிற்பெயர்
- D. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், இரண்டாம் வேற்றுமைத்தொகை
- E. விடை தெரியவில்லை

52) கீழ்க்கண்டவற்றுள் சிறுபஞ்சமூலம் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இந்நூல் 97 வெண்பாக்களைக் கொண்டது.
2. இந்நூல் கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறு மல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து சிறிய வேர்களைக் கொண்டது.
3. இந்நூல் மருந்தால், வேரால் பெயர் பெற்ற நூல்.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும்2
- C. 1, 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

53) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள வினையாலணையும் பெயர்கள் முறையே,

- A. அகழ்வாரை, பொறுத்தல்
- B. இகழ்வார், பொறுத்தல்
- C. அகழ்வாரை, இகழ்வார்
- D. அகழ்வாரை, நிலம்போல
- E. விடை தெரியவில்லை

54) “கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன்று உண்டாயின்
எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர்; இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்றுஎடுத்த
தாய்வேண்டாள்; செல்லாது அவன்வாயின் சொல்” - என்ற பாடல் ஔவையாரின் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

- A. கொன்றைவேந்தன்
- B. மூதுரை
- C. நல்வழி
- D. ஆத்திசூடி
- E. விடை தெரியவில்லை

55) கீழ்க்கண்டவற்றுள் கூடலூர்கிழார் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவர் கி.பி. நான்காம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
2. இவர் முதுமொழிக்காஞ்சி, குறுந்தொகை ஆகிய நூல்களைத் தொகுத்துள்ளார்.
3. இவர் திருச்சி மாவட்டத்தில் பிறந்தார்.

- A. 1 மட்டும்

- B. 1 மற்றும்2
- C. 1, 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

56) ‘அன்றே யொழிய விடல்’ என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. ஊழலால் வந்த செல்வம்
- B. முன்னோர் வழிவந்த செல்வம்
- C. பிரச்சனைக்குரிய செல்வம்
- D. நடுநிலை தவறி உண்டாகும் செல்வம்
- E. விடை தெரியவில்லை

57) “நகச்சொல்லி நட்பாடல் தேற்றாதவர்” எத்தகைய செயலைச் செய்வர் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. நண்பர்களுக்கு நன்மை செய்வர்
- B. நண்பர்களுக்குத் தீமை செய்வர்
- C. உறவுகளை விட்டு விடுவர்
- D. புறம்பேசி நண்பர்களைப் பிரித்து விடுவர்
- E. விடை தெரியவில்லை

58) நல்லாற்றாள் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை - இத்திருக்குறள் பயின்று வரும் அதிகாரம் எது?

- A. அருளுடைமை
- B. ஆள்வினையுடைமை
- C. அன்புடைமை
- D. பண்புடைமை
- E. விடை தெரியவில்லை

59) “வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு நுணங்கிநூல் நோக்கி நுழையா” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. கணிமேதாவியார்
- B. சமணமுனிவர்கள்
- C. பூதஞ்சேந்தனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

60) கீழ்க்கண்டவற்றுள் காரியாசான் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர்.
2. காரி என்பது இயற்பெயர், ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர் ஆகும்.
3. இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர்.
4. காரியாசானும் நல்லாதனாரும் ஒரு சாலை மாணாக்கர்.

- A. 1, 2 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

61) “இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்” - இக்குறளடியில், “எவ்வம்” என்பது யாது?

- A. நன்மை
- B. தீமை
- C. இன்பம்
- D. துன்பம்
- E. விடை தெரியவில்லை

62) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) நீரது 1. பகுத்து
(b) பாத்து 2. வருந்தும்
(c) விழுமியார் 3. திருமகள்
(d) செய்யாள் 4. உயர்ந்தவர்
(e) குழையும் 5. தன்மை

- A. 4 5 3 2 1
- B. 5 1 3 4 2
- C. 5 1 4 3 2
- D. 1 2 3 4 5
- E. விடை தெரியவில்லை

63) அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொற்களின் இலக்கணக்குறிப்பைத் தேர்க

- A. தொழிற்பெயர், வினைமுற்று
- B. வினைமுற்று, தொழிற்பெயர்
- C. வியங்கோள் வினைமுற்று, வினையெச்சம்
- D. வினையெச்சம், வியங்கோள் வினைமுற்று
- E. விடை தெரியவில்லை

64) “ஆற்றுப் பெருக்குஅற்று அடிசுடும் அந்நாளும் ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும்: ஏற்றவர்க்கு” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. சமணமுனிவர்கள்
- C. காரியாசான்
- D. ஔவையார்
- E. விடை தெரியவில்லை

65) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) காரிகை 1. செயல்
(b) பொறை 2. தண்டித்து
(c) இயைபு 3. பொருத்தம்
(d) கருமம் 4. சுமை
(e) ஒறுத்து 5. பெண்

- A. 4 5 3 2 1
- B. 5 4 3 1 2
- C. 5 4 3 2 1
- D. 1 2 3 4 5
- E. விடை தெரியவில்லை

66) ‘புன்கணீர் பூசல் தரும்’ என்று திருக்குறள் குறிப்பிடுவது எதனை /எவை?

- A. உயிர்
- B. உடல்
- C. அன்பு
- D. செல்வம்
- E. விடை தெரியவில்லை

67) “சிறிய பொருள் கொடுத்துச் செய்த வினையால்
பெரிய பொருள்கருது வாரே” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. பழமொழி நானூறு
- C. மூதுரை
- D. நாலடியார்
- E. விடை தெரியவில்லை

68) கீழ்க்கண்டவற்றுள் கபிலர் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்.
2. இவர் இனியவை நாற்பது நூலின் ஆசிரியர்.
3. இவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

- A. 1 மட்டும்
- B. 3 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

69) கீழ்க்கண்டவற்றுள் திரிகடுகம் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது.
2. இந்நூல் சுக்கு, ஏலம், திப்பிலியால் ஆன மருந்துப் பெயர் ஆகும்.
3. இந்நூல் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை ஏற்படுத்தும்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1, 2மற்றும் 3
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

70) வாழ்க்கையின் துணை என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. கல்வி
- B. பொறுமை
- C. அறிவு
- D. ஒழுக்கம்
- E. விடை தெரியவில்லை

71) பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று - இக்குறட்பாவில் அடிக்கோடிட்ட சொற்களின் இலக்கணம் முறையே,

- A. குறிப்பு வினைமுற்று, தொழிற்பெயர்
- B. தொழிற்பெயர், குறிப்பு வினைமுற்று
- C. தெரிநிலை வினைமுற்று, தொழிற்பெயர்
- D. தொழிற்பெயர், தெரிநிலை வினைமுற்று
- E. விடை தெரியவில்லை

72) திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. - இக்குறட்பாவிற்கு ஏற்ற பொருளைத் தேர்வு செய்க.

- A. பிறர் செய்யும் தீமையைப் பொறுத்துக்கொள்ளாது தண்டித்தவர்க்கு ஒரு நாள் மட்டுமே இன்பம் கிட்டும்; அதனைப் பொறுத்துக்கொண்டவரின் புகழ், உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.
- B. நற்குணங்கள் நம்மைவிட்டு நீங்காதிருக்கவேண்டுமானால், பொறுமையை நாம் போற்றிக் கடைப்பிடித்தல் வேண்டும்.
- C. பிறர் செய்யும் துன்பத்தை ஒருவர் பொறுத்துக்கொள்ளுதல் சிறந்தது; அதனைவிடச் சிறந்தது அத்துன்பத்தை மறந்துவிடுதல்.
- D. செய்யத்தகாத துன்பச் செயல்களைப் பிறர் தனக்குச் செய்தாலும், தான் அத்துன்பத்துக்கு வருந்தி, அறத்துக்கு மாறான செயல்களை அவருக்குச் செய்யாதிருத்தல் நல்லது.
- E. விடை தெரியவில்லை

73) “மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து
பின்னை அறிவென் என்றல் பேதைமை” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. முதுமொழிக்காஞ்சி

- C. அறநெறிச்சாரம்
- D. ஆசாரக்கோவை
- E. விடை தெரியவில்லை

74) கீழ்க்கண்டவற்றுள் நீதிநெறி விளக்கம் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இந்நூலின் ஆசிரியர் குமரகுருபரர்
2. கடவுள் வாழ்த்தில் இறைவனை ‘எம்பிரான்’ என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார் குமரகுருபரர்.
3. இந்நூல் 102 வெண்பாக்களைக் கொண்டது.

- A. 1, 2 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

75) கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்டு அதனொடு நேர் - இக்குறளில் பயிலும் அணிவகை யாது?

- A. உவமையணி
- B. எடுத்துக்காட்டு உவமையணி
- C. உருவக அணி
- D. நிரல்நிறையணி
- E. விடை தெரியவில்லை

76) “ஆன்ற குடிப்பிறத்தல்” - என்ற திருக்குறள் உணர்த்தும் பொருள் எது?

- A. புகழுடன் பிறத்தல்
- B. சிறந்த குடும்பத்தில் பிறத்தல்
- C. தான் பிறந்த குடியைத் தரம் உயர்த்துதல்
- D. நடுத்தரக் குடும்பமாதல்
- E. விடை தெரியவில்லை

77) “விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. ஔவையார்
- C. சமணமுனிவர்கள்
- D. பெருவாயின் முள்ளியார்
- E. விடை தெரியவில்லை

78) “அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. கூடலூர்கிழார்
- C. முனைப்பாடியார்
- D. பெருவாயின் முள்ளியார்
- E. விடை தெரியவில்லை

79) பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.
“நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்”

- A. இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
  தெள்ளியர் ஆதலும் வேறு.

- B. நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
  நல்லவாம் செல்வம் செயற்கு
- C. ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
  சூழினும் தான்முந்து உறும்
- D. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
  உண்மை யறிவே மிகும்.
- E. விடை தெரியவில்லை

80) கீழ்க்கண்டவற்றுள் கணிமேதாவியார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
2. இவர் சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை திணைமாலை நூற்றைம்பதில் வலியுறுத்துகிறார்.
3. இவர் திணைமாலை நூற்றைம்பது, ஏலாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

81) “தோல்கன்றைக் காட்டிப் பசுவின் பாலைக் கறக்கும் பழக்கம் கொடியது” என்று கூறும் நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. மூதுரை
- C. நாலடியார்
- D. திரிகடுகம்
- E. விடை தெரியவில்லை

82) செல்வந்தராக இருந்தும் வறியவர் எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?

- A. ஊக்கம் இல்லாதார்
- B. விருந்தோம்பல் பண்பு இல்லாதார்
- C. ஈகைக் குணமற்றவர்
- D. ஒப்புரவறிதல் இல்லாதார்
- E. விடை தெரியவில்லை

83) “இழுக்கா இயன்றது அறம்” - எவை?

- A. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்
- B. அறம், பொருள், இன்பம், வீடு
- C. மகிழ்ச்சி, சத்தமிடுதல், சிரித்தல், அமைதி
- D. காமம், வெகுளி, மயக்கம், வினை
- E. விடை தெரியவில்லை

84) “பண்வனப்புக் கேட்டார்நன் றென்றல், கிளர்வேந்தன் தன்னாடு வாட்டான்நன் றென்றல் வனப்பு” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. கணிமேதாவியார்
- B. காரியாசான்
- C. பூதஞ்சேந்தனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

85) “பயவாக் களர் அனையர்” என்று திருவள்ளுவர் யாரைக்குறிப்பிடுகிறார்?

- A. பொருட் செல்வம் இல்லாதவர்
- B. தற்குறிகள்
- C. மானம் அற்றவர்

- D. கல்லாதவர்
- E. விடை தெரியவில்லை

86) குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு - இக்குறளடியில் உள்ள “தழீஇ” என்ற சொல்லின் பொருள் யாது?

- A. பண்போடு
- B. இரக்கத்தோடு
- C. உரிமையுடன்
- D. அரவணைத்து
- E. விடை தெரியவில்லை

87) “ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லான்” என்று திருக்குறளின் பெருமையைப் புகழ்ந்தவர் யார்?

- A. கபிலர்
- B. நத்தத்தனார்
- C. இடைக்காடர்
- D. இறையனார்
- E. விடை தெரியவில்லை

88) “கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து, தானும்தன்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. சமணமுனிவர்கள்
- C. ஔவையார்
- D. காரியாசான்
- E. விடை தெரியவில்லை

89) “இடர்தீர்த்தல் எள்ளாமை கீழ்இனம் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. ஏலாதி
- C. முதுமொழிக்காஞ்சி
- D. மூதுரை
- E. விடை தெரியவில்லை

90) “எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து” - இப்பாடலடியின் ஆசிரியர் யார்?

- A. கணிமேதாவியார்
- B. பெருவாயின் முள்ளியார்
- C. சமணமுனிவர்கள்
- D. முன்றுறையரையனார்
- E. விடை தெரியவில்லை

91) கீழ்க்கண்டவற்றுள் விளம்பி நாகனார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்.
2. இவர் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
3. விளம்பி என்பது ஊர்ப் பெயர், நாகனார் என்பது இயற்பெயர்.
4. இவர் ஒவ்வொரு பாட்டிலும் நான்கு அறக்கருத்துகளைக் கூறுகிறார்.

- A. 2 மற்றும் 3, 4
- B. 1 மற்றும் 4
- C. 1, 2 மற்றும் 3

- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

92) கீழ்க்கண்டவற்றுள் முதுமொழிக்காஞ்சி பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இந்நூல் காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று.
2. இந்நூலிற்கு அறவுரைக்கோவை என்று வேறுபெயர் உண்டு.
3. இந்நூல் கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம் பொருள் இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்துகிறது.
4. இந்நூல் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

- A. 1, 2 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

93) “கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர்” எதற்குச் சமம் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. கல்
- B. மரம்
- C. மலை
- D. பூமி
- E. விடை தெரியவில்லை

94) அன்பினால் விளையும் பயன்களாக வள்ளுவர் கூறுவன எவை?

- A. பிறரிடத்தில் ஆர்வம் உடைமை
- B. எல்லா உயிர்களிடமும் ஏற்படும் இரக்கம்
- C. நட்பு என்னும் நாடாச் சிறப்பு
- D. A மற்றும் C
- E. விடை தெரியவில்லை

95) அறத்திற்கு மட்டுமன்று, மறத்திற்கும் துணை என்று திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

- A. பொறுமை
- B. அன்பு
- C. பெருமை
- D. கல்வி
- E. விடை தெரியவில்லை

96) “பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்” - இப்பாடலடிகளின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. சமணமுனிவர்கள்
- C. பூதஞ்சேந்தனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

97) பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை - இக்குறட்பாவில் ‘ஓம்பி’ என்ற சொல்லின் பொருள் யாது?

- A. ஆராய்தல்
- B. போற்றிக் காத்தல்
- C. இழிவு படுத்துதல்
- D. வருத்தப்படுதல்
- E. விடை தெரியவில்லை

98) பொருத்துக (குறள்: சொல்லும் பொருளும்)
(a) இன்மை 1. இழிவுபடுத்துவோர்
(b) நிறை 2. அறிவிலார்
(c) இகழ்வார் 3. தண்டித்தவர்
(d) மடவார் 4. வறுமை
(e) ஒறுத்தார் 5. சால்பு

- A. 4 5 2 1 3
- B. 3 4 5 2 1
- C. 4 5 1 2 3
- D. 1 2 3 4 5
- E. விடை தெரியவில்லை

99) “உடையர் எனப்படுவது ஊக்கம்” இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

- A. வறியவர்
- B. நடுத்தரப் பிரிவினர்
- C. செல்வந்தர்
- D. பொறுமைப் பண்பாளர்
- E. விடை தெரியவில்லை

100) “கள்வம் என்பார்க்கும் துயில்இல்லை காதலி மாட்டு
உள்ளம் வைப்பார்க்கும் துயில்இல்லை ஒண்பொருள்
செய்” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. நான்மணிக்கடிகை
- C. மூதுரை
- D. நாலடியார்
- E. விடை தெரியவில்லை

101) ‘கல்லாதவரின் கடை’ என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

- A. நூல்களைக் கற்றுக் கொண்டிருப்பவர்
- B. நூல்களைக் கற்று அவைக்கு அஞ்சுபவர்
- C. நூல்களைக் கற்று அதிகம் பேசுபவர்
- D. நூல்களைக் கற்று பேச மறுப்பவர்
- E. விடை தெரியவில்லை

102) ‘உண்மை நிலக்குப் பொறை’ என்று திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

- A. வீரம் இல்லாதவர்
- B. இரக்கப் பண்பு உள்ளவர்
- C. ஒழுக்கம் இல்லாதவர்
- D. கண்ணோட்டம் இல்லாதவர்
- E. விடை தெரியவில்லை

103) “பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னர்
மரீஇப் பின்னைப் பிரிவு” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. இன்னா நாற்பது
- B. நான்மணிக்கடிகை
- C. மூதுரை
- D. நாலடியார்
- E. விடை தெரியவில்லை

104) “யார் அறிவார் நல்லாள் பிறக்கும் குடி” - இப்பாடலடிகளின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்

- B. சமணமுனிவர்கள்
- C. பூதஞ்சேந்தனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

105) ‘உயர்குடியினர்’ என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

- A. கல்வி கற்றவர்
- B. பிறர்பொருளை விரும்பாதவர்
- C. ஒழுக்கம் உள்ளவர்
- D. பொறாமைக் குணம் இல்லாதவன்
- E. விடை தெரியவில்லை

106) எவரிடம் செல்வம் வழிதேடிச் சென்றடையும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. நடுவுநிலைப் பண்பு உள்ளவரிடம்
- B. நல்லவரிடத்தில்
- C. ஊக்கம் உடையவரிடம்
- D. பொறையுடைமைப் பண்புள்ளவரிடம்
- E. விடை தெரியவில்லை

107) “இழவன்று எருதுண்ட உப்பு” - என்ற பழமொழி உணர்த்தும் பொருள் யாது?

- A. மக்களிடம் அன்பு
- B. படித்தவனிடமே பொறுப்பை ஒப்புவிக்கவும்
- C. நல்ல விதி இருப்பவன் சிறப்பு அடைவான்.
- D. நாணயம் இல்லாதவனிடம் ஒப்பிக்க வேண்டாம்.
- E. விடை தெரியவில்லை

108) “முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. திரிகடுகம்
- C. நாலடியார்
- D. பழமொழி நானூறு
- E. விடை தெரியவில்லை

109) வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் - இக்குறளடியில் ‘மீதம்’ என்று பொருள் தரும் சொல்லைத் தேர்க

- A. மிசைவான்
- B. புலம்
- C. மிச்சில்
- D. ஓம்பி
- E. விடை தெரியவில்லை

110) அறத்தான் வருவதே _______ மற்றெல்லாம்
புறத்த புகழும் இல - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. பெருமை
- B. இன்பம்
- C. செல்வம்
- D. குடிமை
- E. விடை தெரியவில்லை

111) கீழ்க்கண்டவற்றுள் மருந்துப் பெயர்கள் கொண்ட அறநூல்களில் எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?
1. மருந்துப் பெயர்களில் முதலாவதாக அமைந்த நூல் - ஏலாதி
2. மருந்துப் பெயர்களில் இரண்டாவதாக அமைந்த நூல் - திரிகடுகம்
3. மருந்துப் பெயர்களில் மூன்றாவதாக அமைந்த நூல் - சிறுபஞ்சமூலம்

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

112) கீழ்க்கண்டவற்றுள் ஏலாதி பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட 80 வெண்பாக்களைக் கொண்டது.
2. இந்நூல் ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாக கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருள்.
3. இந்நூல் நான்கு அடிகளில் ஆறு அருங்கருத்துகளைக் கூறுகிறது.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும்2
- C. 1, 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

113) “முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று” - இப்பாடல் உணர்த்தும் பொருள் யாது?

- A. வறுமை வந்தாலும் பழைய புகழைப் பேசுவதே சிறந்தது.
- B. முற்காலத்துப் பெருகிய செல்வம் வந்த பிறகு அகந்தை கொள்வது சிறந்தது.
- C. முற்காலத்துப் பெருகிய செல்வம் இருக்கும்போதே தானம் செய்வது சிறந்தது.
- D. முற்காலத்துப் பெருகிய செல்வத்தைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.
- E. விடை தெரியவில்லை

114) “சான்றோர்க்கு அணி” என்று திருக்குறள் எப்பண்பினைக் குறிப்பிடுகின்றது?

- A. புறங்கூறாமை
- B. பொறுமை
- C. அமைதிக் குணம்
- D. ஒருபால் கோடாமை
- E. விடை தெரியவில்லை

115) வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி ________ப் படின் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. படிறு
- B. ஒழுக்க
- C. பற்று
- D. குற்ற
- E. விடை தெரியவில்லை

116) “கூறப்படும் குணத்தான் கூர்வேல்வல் வேந்தனால்
தேறப்படும் குணத்தி னான்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. சமணமுனிவர்கள்
- C. பூதஞ்சேந்தனார்
- D. காரியாசான்
- E. விடை தெரியவில்லை

117) கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?
1. பகைவரைத் தண்டிப்பதனைவிட - அவருக்கு நன்மைசெய்தல் சிறந்தது.

2. இளமையைக் காட்டிலும் - நாணமுடையவராக இருப்பதே சிறந்தது.
3. அழகுடையவராக இருப்பதினும் - நோயற்ற வாழ்வே சிறந்தது.
4. காதலில் சிறந்தன்று - கண்ணஞ்சப் படுதல்.

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. நான்கு இணைகள்
- E. விடை தெரியவில்லை

118) திருக்குறளைப் புகழ்ந்து போற்றியவர்களின் தவறான இணையைத் தேர்க.

- A. “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே” - பாரதிதாசன்
- B. “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” - பாரதியார்
- C. “திருவள்ளுவர் தோன்றிராவிட்டால் தமிழன் என்ற ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது” - கி. ஆ.பெ. விசுவநாதம்
- D. “நீதித் திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்
  ஓதித்தொழுது எழுக ஓர்ந்து” - ஆல்பர்ட் ஸ்வைட்சர்
- E. விடை தெரியவில்லை

119) நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் _______ நன்று - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. புகழே
- B. இரத்தலே
- C. ஈதலே
- D. பழியே
- E. விடை தெரியவில்லை

120) சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - இக்குறள் இடம்பெற்றுள்ள திருக்குறளின் அதிகாரம் எது?

- A. பெரியாரைத் துணைக்கோடல்
- B. நட்பாராய்தல்
- C. மன்னரைச் சேர்ந்தொழுகல்
- D. அறன் வலியுறுத்தல்
- E. விடை தெரியவில்லை

121) “நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. கொன்றைவேந்தன்
- C. வாக்குண்டாம்
- D. ஆத்திசூடி
- E. விடை தெரியவில்லை

122) “குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. கொன்றைவேந்தன்
- B. ஆத்திசூடி
- C. வாக்குண்டாம்
- D. நல்வழி
- E. விடை தெரியவில்லை

123) “தாவின்றி எப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்

- B. முதுமொழிக்காஞ்சி
- C. அறநெறிச்சாரம்
- D. ஆசாரக்கோவை
- E. விடை தெரியவில்லை

124) ‘ஒரு செயல் வெற்றி பெற எவற்றையெல்லாம் ஐயத்திற்கு இடமின்றி ஆராய்ந்து தெளிய வேண்டும்’ என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
1. பொருள்
2. கருவி
3. காலம்
4. வினை
5. இடம்

- A. 1, 2, 3 மட்டும்
- B. 3, 4, 5 மட்டும்
- C. 1, 3, 5 மட்டும்
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

125) திருக்குறள் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இது உத்திரவேதம், தெய்வ நூல், பொய்யாமொழி, திருக்குறள் மெய்ப்பொருளுரை போன்ற வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது
2. திருக்குறளை முதன்முதலாகப் பதிப்பித்தவர் மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம்
3. ‘திரு’ என்ற அடைமொழி பெற்ற நூல்

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. இவற்றில் ஏதுமில்லை
- E. விடை தெரியவில்லை

126) “கற்றாருள் கற்றார் எனப்படுவர்” எவர்?

- A. அவையின் தன்மையறிந்து பேசவல்லவர்
- B. பொதுமக்கள் முன் பேசவல்லவர்
- C. கற்றவர் நிறைந்த அவையில் பேசவல்லவர்
- D. அடுக்கு மொழியில் பேசுவோர்
- E. விடை தெரியவில்லை

127) அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று - இக்குறளில் பயிலும் அணி எது?

- A. உருவகவணி
- B. எடுத்துக்காட்டுவமையணி
- C. உவமையணி
- D. பிறிதுமொழிதலணி
- E. விடை தெரியவில்லை

128) கீழ்க்கண்டவற்றுள் கொன்றைவேந்தன் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. ஓர் எழுத்திற்கு ஒரு பாடலாக மொத்தம் 81 பாடல்கள் உள்ளன.
2. இந்நூல் அகரவரிசையில் பாடல்கள் அமைந்துள்ளன.
3. இந்நூல் சிவபெருமான் வணக்கத்துடன் தொடங்குகிறது.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும் 2
- C. 1, 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

129) “செய்தீவினை இருக்க, தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. ஆத்திசூடி
- C. வாக்குண்டாம்
- D. கொன்றைவேந்தன்
- E. விடை தெரியவில்லை

130) பொருத்துக
(a) திருக்குறள் உரைக்களஞ்சியம் 1. இ. சுந்தரமூர்த்தி
(b) திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு 2. காரிரத்தினக் கவிராயர்
(c) வள்ளுவம் 3. தண்டபாணிதேசிகர்
(d) திருக்குறள் நுண்பொருள்மாலை 4. கி. வா. ஜகந்நாதன்
(e) திருக்குறள் நடையியல் 5. வ.சுப. மாணிக்கம்

- A. 1 2 3 4 5
- B. 5 4 3 2 1
- C. 3 4 5 2 1
- D. 3 4 5 1 2
- E. விடை தெரியவில்லை

131) “அனைத்தே புலவர் தொழில்” என்று திருக்குறள் எவற்றைக் குறிப்பிடுகிறது?

- A. நேருக்கு நேரில் மகிழ்வுடன் உரையாடல்
- B. வருத்தத்துடன் பிரிதல்
- C. இணைந்து விருந்துண்ணல்
- D. A மற்றும் B
- E. விடை தெரியவில்லை

132) “காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. கணிமேதாவியார்
- B. காரியாசான்
- C. பூதஞ்சேந்தனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

133) பொருத்துக (குறள்: சொல்லும் பொருளும்)
(a) செப்பம் 1. விலகி
(b) ஏமாப்பு 2. கோணுதல்
(c) ஒரீஇ 3. நடுவுநிலைமை
(d) கோட்டம் 4. பாதுகாப்பு

- A. 1 2 3 4
- B. 4 2 3 1
- C. 4 3 2 1
- D. 3 4 1 2
- E. விடை தெரியவில்லை

134) ஐந்தும் அகத்தே நகும் - இக்குறளடியில் திருவள்ளுவர் எதனை வலியுறுத்துகிறார்?

- A. போலி நடிப்பு
- B. போலி ஒழுக்கம்
- C. போலி மரியாதை
- D. போலி உண்மை
- E. விடை தெரியவில்லை

135) “பகல் தெற்கு நோக்கார் இராவடக்கு நோக்கார்
பகற்பொய்யார் தீயுனுள் நீர்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. ஆசாரக்கோவை
- C. முதுமொழிக்காஞ்சி
- D. மூதுரை
- E. விடை தெரியவில்லை

136) “கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர் - வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய்! தோற்பன
கொண்டு புகாஅ ரவை” என்ற பழமொழி நானூறு பாடலுக்கேற்ற திருக்குறளைத் தேர்க.

- A. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
  நன்றி பயவா வினை.
- B. ஒஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
  ஆஅதும் என்னு மவர்.
- C. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
  நடுக்கற்ற காட்சி யவர்.
- D. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
  மாட்சியின் மாசற்றார் கோள்
- E. விடை தெரியவில்லை

137) கீழ்க்கண்டவற்றுள் சாகித்திய அகாடமி விருது பெற்ற திருக்குறள் நூல்களில் பொருந்தாதது எது?

- A. திருக்குறள் நீதி இலக்கியம்
- B. திருக்குறள் புதைபொருள்
- C. வாழும் வள்ளுவம்
- D. வணக்கம் வள்ளுவ
- E. விடை தெரியவில்லை

138) “கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

- A. பெருமை
- B. துன்பம்
- C. இன்பம்
- D. அறிவு
- E. விடை தெரியவில்லை

139) “அன்றாட வாழ்க்கையில் செய்யும் சிறுசிறு செயல்களையும் எந்த முறையில் செய்ய வேண்டும்” - என்று விரிவாக கூறும்நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. மூதுரை
- C. முதுமொழிக்காஞ்சி
- D. ஆசாரக்கோவை
- E. விடை தெரியவில்லை

140) “இயல்புளிக் கோலேச்சும் மாநில மன்னன்” யார்?

- A. பகைவரை வெற்றிபெறும் மன்னன்
- B. கொடைத்தன்மை உடைய மன்னன்
- C. கண்ணோட்டம் உடைய மன்னன்
- D. நேர்மையுடன் ஆளும் மன்னன்
- E. விடை தெரியவில்லை

141) அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போலவர்
_________பண்பு இல்லா தவர் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. தெய்வப்
- B. கடவுள்
- C. இறை
- D. மக்கள்
- E. விடை தெரியவில்லை

142) கீழ்க்கண்டவற்றுள் நாலடியார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இந்நூலில் துறவியல் முதலில் அமைந்துள்ளது.
2. இந்நூலிற்கு உரைகண்டவர்கள் பதுமனார், தருமர்.
3. இந்நூல் முத்தரையரைப் பற்றிக் கூறுகிறது.
4. இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்.

- A. 1 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

143) ‘மணிமொழிக்கோவை’ - அடைமொழியால் குறிக்கப்படும் நூல்களின் ஆசிரியர்கள் முறையே.

- A. விளம்பிநாகனார், பூதஞ்சேந்தனார், நல்லாதனார்
- B. பெருவாயின் முள்ளியார், மதுரை கூடலூர் கிழார், விளம்பிநாகனார்
- C. சமணமுனிவர்கள், கபிலர், விளம்பிநாகனார்
- D. விளம்பிநாகனார், மதுரை கூடலூர் கிழார், பெருவாயின் முள்ளியார்.
- E. விடை தெரியவில்லை

144) கீழ்க்கண்ட எவற்றை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. ஒருவருடைய குணம்
- B. குடும்பம்
- C. குற்றமும் சுற்றத்தாரின் இயல்பும்
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

145) கீழ்க்கண்டவற்றுள் திருக்குறளை மொழிபெயர்த்தவர்களை மொழியின் அடிப்படையில் பொருத்துக.
(a) பிரெஞ்சு 1. பி. டி ஜெயின்
(b) தெலுங்கு 2. அப்பா தீட்சிதர்
(c) இந்தி 3. கிரௌல்
(d) வடமொழி 4. ஏரியல்
(e) ஜெர்மன் 5. வைத்யநாத பிள்ளை

- A. 1 2 3 4 5
- B. 5 4 2 1 3
- C. 4 5 1 2 3
- D. 5 4 3 2 1
- E. விடை தெரியவில்லை

146) கீழ்க்கண்டவற்றுள் பழமொழி நானூறு பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார்.
2. முப்பத்தி எட்டு அதிகாரங்களில் நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது.
3. தொல்காப்பியர் பழமொழியை ‘முதுசொல்’ என்று குறிப்பிடுகிறார்.

- A. 2 மட்டும்
- B. 1 மற்றும் 3
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

147) பிறன்பழி கூறுவான் _________ யுள்ளும்
திறன் தெரிந்த கூறப் படும் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. பிறர்பழி
- B. அவன்பழி
- C. சும்பழி
- D. தன்பழி
- E. விடை தெரியவில்லை

148) கீழ்க்கண்டவற்றுள் பெருவாயின் முள்ளியார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்.
2. இவர் ஆசாரக்கோவையின் ஆசிரியர்.
3. இவர் பிறந்த ஊர் கயத்தார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

149) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. பொருளற்றார் பூப்பர் அருளற்றார் ஒருகால்
  அற்றார்மற் றாதல் அரிது.
- B. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
  அற்றார்மற் றாதல் அரிது.
- C. பொருளற்றார் அற்றார்மற் றாதல் அருளற்றார்
  பூப்பர் ஒருகால் அரிது.
- D. பொருளற்றார் பூப்பர் அருளற்றார் அற்றார்மற்
  றாதல் ஒருகால் அரிது.
- E. விடை தெரியவில்லை

150) "தோல்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை" - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. சமணமுனிவர்கள்
- C. பூதஞ்சேந்தனார்
- D. நல்லாதனார்
- E. விடை தெரியவில்லை

151) வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

- A. உவமை அணி
- B. தற்குறிப்பேற்ற அணி
- C. எடுத்துக்காட்டு உவமையணி
- D. நிரல்நிறை அணி
- E. விடை தெரியவில்லை

152) கீழ்க்கண்ட நாலடியார் பாடலுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்க.
"சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு."

- A. பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
  கெழுதகைமை கேடு தரும்
- B. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
  அதிர வருவதோர் நோய்.

- C. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
  அல்லல் படுப்பதூஉம் இல்.
- D. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
  இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.
- E. விடை தெரியவில்லை

153) “மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து” - என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது எதனை?

- A. ஒருவர் பெற்ற செல்வம்
- B. வள்ளல் குணம்
- C. வாய்மை
- D. உயர்வான எண்ணங்கள்
- E. விடை தெரியவில்லை

154) கீழ்க்கண்டவற்றுள் ஆசாரக்கோவை பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இந்நூலின் பொருள் நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு ஆகும்.
2. இந்நூலுக்கு மூல நூல் ‘ஆரிடம்’ என்ற வடமொழி நூலாகும்.
3. ‘ஆசாரம்’ என்றால் நீதி என்று பொருள்.
4. இந்நூல் நூறு ஆசிரியப்பாக்களைக் கொண்டது.

- A. 1, 2 மற்றும் 3
- B. 2 மற்றும் 4
- C. 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

155) “வருவிருந்து <u>வைகலும்</u> ஓம்புவான் வாழ்க்கை” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் எது?

- A. ஆண்டுதோறும்
- B. வாரந்தோறும்
- C. நாள்தோறும்
- D. எப்பொழுதும்
- E. விடை தெரியவில்லை

156) கீழ்க்கண்டவற்றுள் ‘சிறந்த பத்து’ கருத்துகளில் தவறான ஒன்றைத் தேர்க

- A. வண்மையில் சிறந்தன்று வாய்மை உடைமை.
- B. மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.
- C. ஓதலில் சிறந்தன்று கற்றாரை வழிபடுதல்.
- D. குலனுடைமையின் கற்புச் சிறந்தன்று.
- E. விடை தெரியவில்லை

157) “அறம்” என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் இலக்கணம் யாது?

- A. சொல்லில் தூய்மை
- B. செயலில் தூய்மை
- C. A மற்றும் B
- D. மனதில் தூய்மை
- E. விடை தெரியவில்லை

158) “இளைதென்று பாம்பிகழ்வார் இல்” - என்ற பழமொழி உணர்த்தும் பொருள் யாது?

- A. அறிந்து செய்யும் அறியாமைச் செயல்
- B. பனைபோலச் செய்யும் உதவி
- C. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே
- D. பொய்யைப் போக்கும் வழி
- E. விடை தெரியவில்லை

159) பொருத்துக (குறள்: சொல்லும் பொருளும்)
(a) சிவிகை 1. தினமும்
(b)மாசு 2. சினம்
(c) வெகுளி 3. குற்றம்
(d) வைகலும் 4. பல்லக்கு

- A. 1 2 3 4
- B. 4 2 3 1
- C. 4 3 2 1
- D. 3 4 1 2
- E. விடை தெரியவில்லை

160) ஈகைப்பண்பிற்கு இலக்கணம் ஆக வள்ளுவம் உரைப்பது எதனை?

- A. தேவைப்படுவோர்க்குக் கொடுத்தல்
- B. எல்லார்க்கும் கொடுத்தல்
- C. இல்லாதவர்க்குக் கொடுத்து உதவுதல்
- D. உறவினர்க்குக் கொடுத்தல்
- E. விடை தெரியவில்லை

161) பொருத்துக. (நாலடியார்)
(a) அறம் 1. 24 அதிகாரங்கள்
(b) பொருள் 2. 13 அதிகாரங்கள்
(c) இன்பம் 3. 3 அதிகாரங்கள்

- A. 1 2 3
- B. 2 3 1
- C. 3 1 2
- D. 2 1 3
- E. விடை தெரியவில்லை

162) தீது என்றும், நன்று என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுவது முறையே எவற்றை?

- A. பழி, புகழ்
- B. புகழ், பழி
- C. யாசித்தல், ஈதல்
- D. ஈதல், யாசித்தல்
- E. விடை தெரியவில்லை

163) இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
________ தகைமை யவர் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. இடிக்கும்
- B. மடுக்கும்
- C. விடுக்கும்
- D. கெடுக்கும்
- E. விடை தெரியவில்லை

164) “வாழ்வாரின் <u>வன்கணார்</u> இல்” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சீரின் பொருள் யாது?

- A. இரக்கமுடையவர்
- B. பெரியவர்
- C. இரக்கமற்றவர்
- D. இளையவர்
- E. விடை தெரியவில்லை

165) “கல்லாதவரும் மிக நல்லவரே” - எப்போது?

- A. புறங்கூறித் திரியாதபோது

- B. சிற்றினம் சேராதபோது
- C. கற்றார் முன் அமைதியாக இருக்கையில்
- D. அடக்கத்துடன் இருக்கும் போது
- E. விடை தெரியவில்லை

166) “நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்” - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்களின் இலக்கணக்குறிப்பைத் தேர்க.

- A. இரண்டாம் வேற்றுமைத்தொகை, வினைத்தொகை.
- B. எதிர்மறைப் பெயரெச்சம், பண்புதொகை.
- C. ஆறாம் வேற்றுமைத்தொகை, வினையாலணையும் பெயர்.
- D. பண்புதொகை, எதிர்மறை தொழிற்பெயர்.
- E. விடை தெரியவில்லை

167) “வடுவன்று வேந்தன் தொழில்” - என வள்ளுவம் உரைப்பது எதனை?

- A. இரக்க உணர்வுடன் அவர்களை அணுகுதல்
- B. குடிமக்கள் வருந்தாமல் காத்தல்
- C. குற்றவாளிகளைத் தண்டித்தல்
- D. B மற்றும் C
- E. விடை தெரியவில்லை

168) “வெறுத்தக்க பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சீரின்
பொருள் யாது?

- A. மிகுதியான்
- B. வெறுக்கத்தக்க
- C. குறைவான
- D. பொருந்தத்தக்க
- E. விடை தெரியவில்லை

169) “வெந்தீக்காண் வெண்ணெய் மெழுகுநீர்சேர் மண்உப்பு
அந்த மகற்சார்ந்த தந்தையென்று” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. ஏலாதி
- C. முதுமொழிக்காஞ்சி
- D. மூதுரை
- E. விடை தெரியவில்லை

170) எவருடைய பண்புகளைப் பாராட்டும் உலகு என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. நீதிக்குரியவர்
- B. நன்மையை விரும்புபவர்
- C. வெகுளாமைக் குணம் கொண்டவர்
- D. A மற்றும் B
- E. விடை தெரியவில்லை

171) “கேட்டினும் உண்டோர் உறுதி” என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது எதனை?

- A. துன்பத்தையும் அனுபவிக்க
- B. இன்பத்தின் அருமை தெரிய
- C. நண்பரின் இயல்பை அளக்க
- D. எதிரிகளை எடைபோட
- E. விடை தெரியவில்லை

172) “சிலம்பிற்குத் தன்சினை கூற்றம் நீள்கோடு
விலங்கிற்குக் கூற்றம் மயிர்தான் வலம்பட” - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருள்களைத் தேர்க.

- A. கொம்பு, மான்
- B. எமன், வெற்றி
- C. வெற்றி, கொம்பு
- D. எமன், மான்
- E. விடை தெரியவில்லை

173) ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
_________ ஓரீஇ விடல் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. தொடர்பு
- B. பண்பு
- C. உறவு
- D. கேண்மை
- E. விடை தெரியவில்லை

174) “கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன்று உண்டாயின்
எல்லாரும் சென்றுஅங்கு எதிர்கொள்வர்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. ஆத்திசூடி
- B. நல்வழி
- C. மூதுரை
- D. கொன்றைவேந்தன்
- E. விடை தெரியவில்லை

175) முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணிநயம் எது?

- A. உவமையணி
- B. உருவகவணி
- C. எடுத்துக்காட்டுவமையணி
- D. ஏகதேச உருவகவணி
- E. விடை தெரியவில்லை

176) சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள்ள தங்குதல் தீது - மேற்காணும் குறளில், வினைசெயல் வகையின் படிநிலைகள் முறையே

- A. காலந்தாழ்த்தாமை, முடிவு, துணிச்சல், ஆராய்தல்
- B. முடிவு, துணிச்சல், காலந்தாழ்த்தாமை, ஆராய்தல்
- C. ஆராய்தல், முடிவு, துணிச்சல், காலம் தாழ்த்தாமை
- D. துணிச்சல், ஆராய்தல், காலம் தாழ்த்தாமை, முடிவு
- E. விடை தெரியவில்லை

177) கீழ்க்கண்டவற்றுள் நாலடியார் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இந்நூல் சேர நாட்டுச் சமணமுனிவர்களால் இயற்றப்பட்டது.
2. இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்களாக 400 பாடல்கள் உள்ளன.
3. இந்நூலிற்கு அதிகாரம் வகுத்தவர் பதுமனார்.
4. இந்நூலில் மொத்தம் 40 அதிகாரங்களும், 13 இயல்களும் உள்ளன.

- A. 2 மற்றும் 3
- B. 1 மற்றும் 4
- C. 1, 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

178) கீழ்க்காணும் பொருளை உடைய திருக்குறளை தேர்க.
“உண்மையான துறவிகள் வேடம் போட வேண்டிய தேவையில்லை. உலகம் பழிக்கி தவறான செயல்களை ஒழித்துவிடுவது

ஒன்றே துறவிகளுக்கு வேண்டுவது”

- A. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
  தானறி குற்றப் படின்.
- B. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
  மூக்கிற் கரியார் உடைத்து.
- C. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
  மறைந்துஒழுகு மாந்தர் பலர்.
- D. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
  பழித்தது ஒழித்து விடின்.
- E. விடை தெரியவில்லை

179) கல்லாதவர், கற்றவர் அவையின் பேச முற்படுதலுக்குக் காட்டப்பட்ட உவமை எது?

- A. இரு தனங்களும் இல்லாதவள் காமத்தை அடைவது போல
- B. கல்லாதவரிடம் உள்ள செல்வம்
- C. ஆடுகளம் இன்றி விளையாட முற்படுதல்
- D. விலங்குகளின் தன்மையை ஒத்தல்
- E. விடை தெரியவில்லை

180) “செல்லும்வாய் நோக்கிச் செயல்” - இக்குறளடியின் பொருளைத் தேர்க

- A. நல்லதையே செய்க
- B. பொருத்தமான வழியறிந்து செயல் செய்க
- C. விரைந்து செயல்படுக
- D. இல்லையெனில் விட்டுவிடுக
- E. விடை தெரியவில்லை

181) “கண்வனப்புக் <u>கண்ணோட்டம்</u>, கால்வனப்புச் செல்லாமை,
<u>வாட்டான்</u>நன் றென்றல் வனப்பு” - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்களின் இலக்கணக்குறிப்பைத் தேர்க.

- A. தொழிற்பெயர், வினையெச்சம்.
- B. எதிர்மறைப் பெயரெச்சம், வினைமுற்று
- C. தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்
- D. வினையாலணையும் பெயர்
- E. விடை தெரியவில்லை

182) வாளொடென் <u>வன்கண்ணர்</u> அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தேர்க.

- A. கோழை
- B. அன்பற்றவர்
- C. வீரர்
- D. கண்ணோட்டம் உடையவர்
- E. விடை தெரியவில்லை

183) உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
_______ இல்லாத கண் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. ஈகை
- B. கண்ணோட்டம்
- C. ஒப்புரவு
- D. பெருமை
- E. விடை தெரியவில்லை

184) போலிச் சாமியார்கள் மேற்கொண்ட தவக்கோலம் எதைப் போன்றது?

- A. ஆட்டுக்கிடாய் புலித்தோலைப் போர்த்து மேய்ந்தாற் போல
- B. புலி பசுவின் தோலைப் போர்த்தி வேட்டையாடலைப் போன்றது.

- C. பசு புலியின் தோலைப் போர்த்து மேய்வதைப் போன்றது
- D. நரி புலித்தோலைப் போர்த்து மேய்வதைப் போன்றது
- E. விடை தெரியவில்லை

185) “சொல்லற்க முன்இன்று பின்நோக்காச் சொல்” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

- A. பின்னால் பார்க்காத
- B. ஆராயாமல்
- C. விளைவுகளை ஆராய்ந்து
- D. முன்னே நோக்கி
- E. விடை தெரியவில்லை

186) “உடன்பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. மூதுரை
- C. கொன்றைவேந்தன்
- D. ஆத்திசூடி
- E. விடை தெரியவில்லை

187) “இருள்சேர்ந்த உலகம் புகல்” எவர்க்கு இல்லை என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. பொருட்செல்வம் உடையவர்க்கு
- B. அனைத்துயிர்களையும் நேசிப்போர்க்கு
- C. அன்புள்ளம் கொண்டோர்க்கு
- D. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு
- E. விடை தெரியவில்லை

188) “ஒருதலையா உள்கோட்டம் இன்மை” - இக்குறளடியின் பொருள் யாது?

- A. பொறாமையின்மை
- B. மனதால் ஒருபக்கம் சாயாமை
- C. பேச்சில் நடுநிலையின்மை
- D. செயலில் நடுநிலையின்மை
- E. விடை தெரியவில்லை

189) “அல்லல் _________ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. அருள்
- B. அன்பு
- C. உயிர்
- D. பற்று
- E. விடை தெரியவில்லை

190) “பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், பேர் உலகில்
உற்றார், உகந்தார் என வேண்டார், மற்றோர்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. விளம்பிநாகனார்
- B. ஔவையார்
- C. சமணமுனிவர்கள்
- D. காரியாசான்
- E. விடை தெரியவில்லை

191) பொருத்துக (குறள் - சொல்லும் பொருளும்)
(a) புலவர் 1. செல்வம்

(b) உவப்ப 2. உயர்ந்த
(c) ஏமாப்பு 3. அறிஞர்
(d) மாடு 4. மகிழ
(e) விழு 5. பாதுகாப்பு

- A. 1 2 3 4 5
- B. 5 4 3 2 1
- C. 3 4 5 1 2
- D. 2 5 4 1 3
- E. விடை தெரியவில்லை

192) “பகையுள்ளும் பண்புள பாடு அறிவார் மாட்டு” - இக்குறளடிக்கு இணையான பொன்மொழியைத் தேர்க

- A. தீதும் நன்றும் பிறர்தர வாரா
- B. இடுக்கண் வருங்கால் நகுதி
- C. எவ்வழி நல்வழி அவ்வழி நம்வழி
- D. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
- E. விடை தெரியவில்லை

193) எப்படிப்பட்டவரைத் தனது பொருளைக் கொடுத்தாவது நட்புக் கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. பழிக்கு நாணுவாரது தொடர்பை
- B. உயர் குடும்பத்தில் பிறந்தார் நட்பை
- C. உள்ளது உள்ளபடிப் பேசவோரது உறவை
- D. உடன் உதவுவோர் நட்பை
- E. விடை தெரியவில்லை

194) “இல்லறம் அல்லது நல்லறம் அன்று” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நல்வழி
- B. ஆத்திசூடி
- C. வாக்குண்டாம்
- D. கொன்றைவேந்தன்
- E. விடை தெரியவில்லை

195) தகாத செயல்களில் ஈடுபடும் தவக்கோலத்தில் உள்ளவர்களை வள்ளுவர் யாருடன் ஒப்பிடுகிறார்?

- A. நடிகர்
- B. வேட்டுவர்
- C. வஞ்சகர்
- D. பாவி
- E. விடை தெரியவில்லை

196) “கொள்ளற்க அல்லல்கண் ஆற்றறுப்பார் நட்பு” - இக்குறளடியின் பொருள் யாது?

- A. நல்லார் நட்பை உறுதிசெய்க
- B. துன்பத்தில் உதவாதாரின் நட்பைக் கைவிடுக
- C. தீயோர் தொடர்பை விட்டு விடுக
- D. நல்லவரின் நட்பை ஏற்க
- E. விடை தெரியவில்லை

197) ஒருவன் அறத்தைப் பற்றிப் பேசாமல் அறம் அல்லாதன செய்தாலும், அவன் எப்படிப்பட்டவனாய் இருத்தல் நல்லது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. பிறர் பற்றிப் புறங்கூறாமல் இருத்தல் நன்று
- B. பிறருக்கு இன்னா செய்யாமை நன்று
- C. பிறர் மீது பழி தூற்றாமல் இருத்தல் நன்று
- D. பிறர் மேல பொறாமைப் படாமல் இருத்தல் நன்று
- E. விடை தெரியவில்லை

198) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) அல்லல் 1. வளப்பம்
(b) மல்லல் 2. துன்பம்
(c) தகைமை 3. நட்பு
(d) கேண்மை 4. மதிப்பு

- A. 2 3 4 1
- B. 2 1 4 3
- C. 4 3 1 2
- D. 3 2 1 4
- E. விடை தெரியவில்லை

199) “பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன்” - இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. வாக்குண்டாம்
- B. ஆத்திசூடி
- C. நல்வழி
- D. கொன்றைவேந்தன்
- E. விடை தெரியவில்லை

200) “அறங்கூறும் ஆக்கந் தரும்” என்று திருக்குறள் எதனைக் குறிப்பிடுகிறது?

- A. களவாடுதல்
- B. தீமை செய்தல்
- C. வாழ்ந்து விடுதல்
- D. இறந்து விடுதல்
- E. விடை தெரியவில்லை